8th August 1966]

**திரு. வை. சங்கரன் :** *நெய்வேலி யூரியா உரத் தொழிற்சாலையில் பூரண அளவு உற்பத்தி தொடங்கிவிட்டதா? அதில் உற்பத்தியாகக் கூடிய உரம் அத்தனையும் 'ஸென்ட்ரல்பூல்'-இல் சேர்க்கப்பட்டு, பிறகு தான் நமக்கு ஒதுக்கப்படுமா?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *இன்னும் பூரண உற்பத்தி ஏற்படவில்லை. உற்பத்தியெல்லாம் 'ஸென்ட்ரல் பூல்'-இல் தான் போகும். எல்லா மாநிலங்களுக்கும் பிரித்துக் கொடுப்பார்கள்.*

**இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை**

***208 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** *கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) நமது ராஜ்யத்தில் மெஷீன் கருவிகள் செய்யும் தொழிற்சாலை நிறுவுவது சம்பந்தமாய், சமீபத்தில் ஜப்பானியத் தொழிற் குழுவினர் நமது ராஜ்யத்தில் எந்தெந்த இடங்களைச் சுற்றிப் பார்த்தனர்?*

*(இ) அதன்பின், இந்த ராஜ்ய அரசாங்கத்துடன் கலந்து ஏதேனும் முடிவு எடுத்துள்ளனரா?*

*(உ) ஆமெனில், அதன் விபரம் என்ன?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Japanese team inspected some areas near Madras, Ranipet, Madurai and Tiruchirappalli.

(*b*) & (*c*) The proposal was discussed by the Japanese team with the Madras State Industrial Development Corporation and as a result, the Japanese Machine Tool Trade Association has been asked to prepare a project report. The Madras State Industrial Development Corporation has also applied to the Government of India for the grant of an Industrial licence.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** *மெஷின் கருவிகள் செய்யும் தொழிற்சாலை அமைப்பதற்கு அடிப்படையான வசதிகள் என்ன என்ன தேவை? இந்தக் குழுவினர் மதுரைக்குத் தென் பக்கத்தில் இருக்கும் ஜில்லாக்களை ஏன் பரிசீலனை செய்யவில்லை?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். இப்பொழுது சென்னை, இராணிப்பேட்டை, மதுரை, திருச்சி ஆகிய இந்த நான்கு இடங்களில் பரிசீலனை செய்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் இடம் இல்லை என்பதல்ல. நான்கு இடங்களில் பரிசீலனை செய்தார்கள். இப்பொழுது எங்கே கொடுப்பது என்பது முடிவு செய்யப்படவேண்டும்.*

**போல்ட்ஸ், நட்ஸ் தொழிற்சாலை**

***209 கேள்வி.—திரு. நா. இராசாங்கம் :** *கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பண்ணுருட்டி, குறிஞ்சிப்பாடி, வடலூர் ஆகிய இடங்களில்* Bolts and nuts